**ஈரோடு மாநகராட்சி**

**மார்ச்-2022**

**சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

*********

ஈரோடு மாநகராட்சி 28.03.2022-ஆம் தேதி திங்கட்கிழமை அன்று முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள் தங்களுக்கு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது என்பதனை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இடம் – ஈரோடு**
**நாள் – 30.03.2022**

**மேயர்,**
**ஈரோடு மாநகராட்சி,**
**ஈரோடு.**

**இணைப்பு– கூட்ட நடவடிக்கைகள்**

**கூட்ட நடவடிக்கைகள்**

## 1. மாண்புமிகு மேயர், மரியாதைக்குரிய துணை மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்களால் கொண்டு வரப்பட்ட நன்றி தீர்மானம்

தமிழகத்தின் நல்லாட்சியில், உள்ளாட்சியிலும் நல்லாட்சி மலர்ந்திட செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும் மாண்புமிகு வீட்டு வசதி வாரியத்துறை அண்ணன் திரு. சு. முத்துசாமி அவர்களுக்கும் இம்மாமன்றம் தனது நெஞ்சார்ந்த நன்றிகளை உரித்தாக்குகின்றது.

## 4. நன்றித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**1.**(அ) ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள **31.03.2022** உடன் உரிமம் முடிவடையும் குத்தகையினங்களான தினசரி சந்தை, வாரச்சந்தை, வாகன நிறுத்துமிடங்கள், கட்டண கழிப்பிடங்கள் மற்றும் பேருந்து நிலையத்தில் நுழையும் பேருந்துகளுக்கு நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் ஆகியவற்றுக்கு ஒப்படைக்கும் தேதியிலிருந்து மூன்றாண்டு காலத்திற்கு குத்தகை உரிமம் வழங்குவதற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 28.01.2022 அன்று கோரப்பட்டது.

உள்ளாட்சி தேர்தல்–2022 நடத்தை விதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டதால் 28.01.2022 அன்று நடைபெற இருந்த பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி தேதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டது. தற்போது உள்ளாட்சி தேர்தல் முடிவுற்று 24.02.2022 முதல் தேர்தல் நடத்தை விதிகள் விலக்கிக் கொள்ளப்பட்டதால் **16.03.2022** அன்று பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி ஏல நாளன்று பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள ஏல முதல் நாளான **15.03.2022** அன்று **29** நபர்கள் ஏலத்தில் கலந்து கொள்ளவும், **4** நபர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவும் வைப்புத் தொகை செலுத்தியிருந்தார்கள். மேற்படியார்கள் **16.03.2022** அன்று நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு கீழ்க்கண்டுள்ளவாறு ஏலக் கேள்வித் தொகை கோரியுள்ளார்கள்.

| வ. எண். | குத்தகையினம் | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை விவரம் | | |
|---|---|---|---|---|
| | | பெயர் திரு./திருமதி. | ஏலக் கேள்வித் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை ரூ. |
| 1. | நேதாஜி தினசரி சந்தை வளாகம் புதுப்பிக்கும் பணி நடைபெறுவதால் தற்போது வ.உ.சி. பூங்கா மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக தினசரி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | அருண்பிரசாத் | 2,01,00,000– | |
| | | பி. சீனிவாசன் | 1,92,00,000– | |
| | | டி. ஜெகதீசன் | 2,01,01,000– | |
| | | அருண்பிரசாத் | | 2,33,01,000– |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | மண்டலம்–2<br>மாணிக்கம்பாளையம்<br>அருகில் நடைபெறும்<br>வாரச்சந்தையில் கட்டணம்<br>வசூலிக்கும் உரிமம் | பி. சீனிவாசன் | 1,95,000– | |
| | | அருண்பிரசாத் | 2,04,000– | |
| | | எம். சதீஸ் | 2,03,000– | |
| | | எஸ். குப்பண்ணா<br>சந்துரு | 2,02,000– | |
| | | அருண்பிரசாத் | | 2,07,000– |
| 3. | நேதாஜி சாலையில் உள்ள<br>ஹெம்மிங்வே வாரச்சந்தை,<br>தங்கபெருமாள் வீதி மற்றும்<br>நீல்கிரீஸ் சந்து பகுதியில்<br>வாரச்சந்தை மற்றும் பெரியார்<br>நகரில் உள்ள<br>வாரச்சந்தைகளில் கட்டணம்<br>வசூலிக்கும் உரிமம் | கே. பாலாஜி | 4,15,000– | |
| | | கே.ஆர். ஸ்ரீதரன் | 4,20,000– | |
| | | பி. ஹரி ஜயப்பன் | 1,36,000– | |
| | | ஏ. தங்கவேல் | 1,37,500– | |
| | | ஏ. அலாவுதீன் | 1,36,500– | |
| | | கே. குமரவேல் | 1,35,000– | |
| | | கண்ணதாசன் | | ஒப்பந்தப்புள்ளி<br>வரப்பெற<br>வில்லை |
| 4. | மண்டலம்–2 பெரியசேமூர்<br>வார்டு எண். 17 கனிராவுத்தர்<br>குளம் பகுதி கட்டண<br>கழிப்பிடத்திற்கு கட்டணம்<br>வசூலிக்கும் உரிமம் | ஏ. தங்கவேல் | 54,700– | |
| | | ஏ. அலாவுதீன் | 54,500– | |
| | | ஏ. செல்வராஜ் | 55,000– | |
| 5. | மண்டலம்–1 பாரதி நகர்<br>பகுதியில் உள்ள கட்டணக்<br>கழிப்பிடத்திற்கு கட்டணம்<br>வசூலிக்கும் உரிமம் | வி. தாமோதரன் | 42,500– | |
| | | ஜி. ஆனந்தன் | 42,000– | |
| 6. | பேருந்து நிலையத்திலுள்ள<br>ஆட்டோ ஸ்டேண்டில்<br>ஆட்டோக்களுக்கு கட்டணம்<br>வசூலிக்கும் உரிமம் | எல். தீனதயாளன் | 77,500– | |
| | | என். சக்திவேல் | 75,500– | |
| | | எஸ். அப்பாசாமி | 77,000– | |
| | | பெ. தனராஜ் | 76,500– | |
| | | ஆர். விஜயபாஸ்கர் | 76,000– | |
| 7. | காந்திஜி வீதியில் உள்ள<br>மாநகராட்சி டாக்சி<br>ஸ்டேண்டில் கட்டணம்<br>வசூலிக்கும் உரிமம் | திருநாவுக்கரசு | 80,500– | |
| | | எம். இராஜமாணிக்கம் | 81,000– | |
| | | ஆர். மின்னல்முருகேசு | | ஒப்பந்தப்புள்ளி<br>வரப்பெற<br>வில்லை |
| 8. | வைஸ் சேர்மன் டி. வீரபத்திர<br>சாலையில் அமைந்துள்ள<br>சுதந்திர தின வெள்ளி விழா<br>மாநகராட்சி பழைய பேருந்து<br>நிலையம் மற்றும் புதிய<br>பேருந்து நிலையத்தில் வந்து<br>செல்லும் பேருந்துகளுக்கு<br>கட்டணம் வசூலிக்கும்<br>உரிமம் | சி.எஸ். லெதர்ஸ் | ஏலத்தில்<br>கலந்து<br>கொண்டு<br>ஒருவரும்<br>ஏலக் கேள்வி<br>கோரவில்லை | |
| | | டி. சிவக்குமார் | | |
| | | பெ. தனராஜ் | | |
| | | எஸ்.கே. வைரவேல் | | |

வ.எண்.1—ல் குறிப்பிடப்பட்டுள்ள நேதாஜி தினசரி சந்தை தற்போது வ.உ.சி. பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக தினசரி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் குத்தகையினத்திற்கு இரண்டாவது முறையாக நடைபெற்ற பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் மூன்று நபர்கள் ஏலத்திலும், ஒரு நபர் ஒப்பந்தப்புள்ளியிலும் கலந்து கொண்டனர். திரு. அருண்பிரசாத் என்பவர் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள தனித்தனியாக வைப்புத்தொகை செலுத்தி ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கேள்வி கோரியுள்ளார். திரு. அருண்பிரசாத் என்பவர் ஒப்பந்தப்புள்ளியில் உச்ச கேள்வித் தொகையாக ரூ.2,33,01,000—க்கு கோரியுள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வித் தொகையானது ஏலத்தில் கோரப்பட்டுள்ள உச்ச ஏலக் கேள்வித் தொகையான ரூ.2,01,01,000—ஐ விட அதிகமாக உள்ளது. மேற்படி திரு. அருண்பிரசாத் என்பவர் ஒப்பந்தப்புள்ளியில் கோரியுள்ள உச்ச கேள்வித் தொகை ரூ.2,33,01,000— குத்தகையினத்திற்கான மூன்றாண்டு சராசரி தொகை ரூ.1,89,15,000—ஐ விட அதிகமாகவும், சென்ற ஆண்டு உரிமத் தொகை ரூ.1,98,45,000—ஐ விட 17% கூடுதலாகவும் உள்ளது.

வ.எண்.2—ல் குறிப்பிடப்பட்டுள்ள மாணிக்கம்பாளையம் அருகில் நடைபெறும் வாரச்சந்தையில் கட்டணம் வசூலிக்கும் குத்தகையினத்திற்கு இரண்டாவது முறையாக நடைபெற்ற பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் நான்கு நபர்கள் ஏலத்திலும், ஒரு நபர் ஒப்பந்தப்புள்ளியிலும் கலந்து கொண்டனர். திரு. அருண்பிரசாத் என்பவர் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள தனித்தனியாக வைப்புத் தொகை செலுத்தி ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு ஏலத்தில் உச்சக் கேள்வித் தொகையாக ரூ.2,04,000—ம், ஒப்பந்தப்புள்ளியில் உச்சக் கேள்வித் தொகையாக ரூ.2,07,000—ம் கோரியுள்ளார். மேற்படியாரின் உச்ச ஏலக் கேள்வித் தொகையை விட ஒப்பந்தப்புள்ளியில் கோரியுள்ள தொகை அதிகமாக உள்ளது. மேற்படி திரு. அருண்பிரசாத் என்பவர் ஒப்பந்தப்புள்ளியில் கோரியுள்ள உச்ச கேள்வித் தொகை ரூ.2,07,000— குத்தகையினத்திற்கான மூன்றாண்டு சராசரி தொகை ரூ.1,65,549—ஐ விட அதிகமாகவும், சென்ற ஆண்டு உரிமத் தொகை ரூ.1,83,897—ஐ விட 12% கூடுதலாகவும் உள்ளது.

வ.எண்.3—ல் குறிப்பிடப்பட்டுள்ள நேதாஜி சாலையில் உள்ள ஹெம்மிங்வே வாரச்சந்தை, தங்கபெருமாள் வீதி மற்றும் நீல்கிரீஸ் சந்து பகுதியில் வாரச்சந்தை மற்றும் பெரியார் நகரில் உள்ள வாரச்சந்தைகளில் கட்டணம் வசூலிக்கும் குத்தகையினத்திற்கு இரண்டாவது முறையாக நடைபெற்ற பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் ஆறு நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டனர். ஒருவர் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள வைப்புத் தொகை செலுத்தியிருந்தார். ஆனால் மேற்படியாரிடமிருந்து ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நாளன்று ஒப்பந்தப்புள்ளி கேள்வி ஏதும் வரப்பெறவில்லை. திரு. கே.ஆர். ஸ்ரீதரன் என்பவர் ஏலத்தில் உச்சக் கேள்வித் தொகையாக ரூ.4,20,000— கோரியுள்ளார். மேற்படியாரது உச்ச ஏலக் கேள்வித் தொகை ரூ.4,20,000— குத்தகையினத்திற்கான மூன்றாண்டு சராசரி தொகை ரூ.1,17,214—ஐ விட அதிகமாகவும், சென்ற ஆண்டு உரிமத் தொகை ரூ.1,30,215—ஐ விட 100%-க்கு மேல் கூடுதலாகவும் உள்ளது.

வ.எண்.4—ல் குறிப்பிடப்பட்டுள்ள கனிராவுத்தர் குளம் பகுதி கட்டண கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் குத்தகையினத்திற்கு இரண்டாவது முறையாக நடைபெற்ற பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் மூன்று நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டனர். திரு. ஏ. செல்வராஜ் என்பவர் உச்ச ஏலக் கேள்வித் தொகையாக ரூ.55,000—க்கு கோரியுள்ளார். மேற்படியாரது உச்ச ஏலக் கேள்வித் தொகை ரூ.55,000— குத்தகையினத்திற்கான மூன்றாண்டு சராசரி தொகை ரூ.45,159—ஐ விட அதிகமாகவும், சென்ற ஆண்டு உரிமத் தொகை ரூ.50,164—ஐ விட 10%-க்கு மேல் கூடுதலாகவும் உள்ளது.

வ.எண்.5–ல் குறிப்பிடப்பட்டுள்ள பாரதி நகர் பகுதியில் உள்ள கட்டணக் கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கான குத்தகையினம் முதல் முறையாக 2022–2025–ம் ஆண்டு குத்தகையினங்களில் சேர்க்கப்பட்டு பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டனர். திரு. வி. தாமோதரன் என்பவர் உச்ச ஏலக் கேள்வித் தொகையாக ரூ.42,500– கோரியுள்ளார்.

வ.எண்.6–ல் குறிப்பிட்டுள்ள பேருந்து நிலையத்திலுள்ள ஆட்டோ ஸ்டேண்டில் ஆட்டோக்களுக்கு கட்டணம் வசூலிக்கும் குத்தகையினத்திற்கு இரண்டாவது முறையாக நடைபெற்ற பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் ஐந்து நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டனர். திரு. எல். தீனதயாளன் என்பவர் ரூ.77,500–க்கு உச்ச ஏலக் கேள்வித் தொகை கோரியுள்ளார். மேற்படியாரது உச்ச ஏலக் கேள்வித் தொகை ரூ.77,500– குத்தகையினத்திற்கான மூன்றாண்டு சராசரி தொகை ரூ.61,535–ஐ விட அதிகமாகவும், சென்ற ஆண்டு உரிமத் தொகை ரூ.68,355–ஐ விட 13% கூடுதலாகவும் உள்ளது.

வ.எண்.7–ல் குறிப்பிட்டுள்ள காந்திஜி வீதி டாக்சி ஸ்டேண்டில் கட்டணம் வசூலிக்கும் குத்தகையினத்திற்கு இரண்டாவது முறையாக நடைபெற்ற பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டனர். திரு. மின்னல்முருகேசு என்பவர் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள வைப்புத் தொகை செலுத்தியிருந்தார். ஆனால் மேற்படியாரிடமிருந்து ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நாளன்று ஒப்பந்தப்புள்ளி கேள்வி ஏதும் வரப்பெறவில்லை. திரு. எம். இராஜமாணிக்கம் என்பவர் ரூ.81,000–க்கு உச்ச ஏலக் கேள்வித் தொகை கோரியுள்ளார். மேற்படியாரது உச்ச ஏலக் கேள்வித் தொகை ரூ.81,000– குத்தகையினத்திற்கான மூன்றாண்டு சராசரி தொகை ரூ.66,498–ஐ விட அதிகமாகவும், சென்ற ஆண்டு உரிமத் தொகை ரூ.73,868–ஐ விட 10% கூடுதலாகவும் உள்ளது.

வ.எண்.8–ல் குறிப்பிட்டுள்ள பேருந்து நிலையத்தில் நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் குத்தகையினத்திற்கு வைப்புத் தொகை செலுத்திய நான்கு நபர்களும் ஏலத்தில் கலந்து கொண்டனர். ஆனால் ஒருவரும் ஏலக் கேள்வி கோரவில்லை.

வ.எண். 1, 2, 3, 4, 6, 7 ஆகிய குத்தகையினங்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்டுள்ள உச்சக் கேள்வித் தொகைகள் முந்தைய ஆண்டு உரிமத் தொகை மற்றும் மூன்றாண்டு சராசரி தொகையை விட கூடுதலாக உள்ளதால் மேற்படியார்களின் உச்ச ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகைகளை ஏற்பதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

வ.எண். 5–ல் குறிப்பிட்டுள்ள பாரதி நகர் கட்டணக் கழிப்பிடம் முதல் முறையாக ஏலம் கோரப்பட்டது. அதில் கோரப்பட்ட உச்ச ஏலக் கேள்வித் தொகை ரூ.42,500–ஐ ஏற்பதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

வ.எண். 8–ல் குறிப்பிட்டுள்ள பேருந்து நிலைய நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் குத்தகையினத்திற்கான ஏலத்தில் கலந்து கொண்ட நான்கு நபர்களும் ஏலக் கேள்விகள் கோரப்படாததால் மறு ஏலம் கோருவதற்கான நடவடிக்கையில் உள்ளது என்ற விவரம் மாமன்றத்திற்கு தெரிவிக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு;-</u>

அ) வ.எண். 1, 2, 3, 4, 6, 7 ஆகிய குத்தகையினங்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்டுள்ள உச்சக் கேள்வித் தொகைகள் முந்தைய ஆண்டு உரிமத் தொகை மற்றும் மூன்றாண்டு சராசரி தொகையை விட கூடுதலாக உள்ளதால்

மேற்படியார்களின் உச்ச ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகைகளை ஏற்பதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) வ.எண். 5–ல் குறிப்பிட்டுள்ள பாரதி நகர் கட்டணக் கழிப்பிடம் முதல் முறையாக ஏலம் கோரப்பட்டது. அதில் கோரப்பட்ட உச்ச ஏலக் கேள்வித் தொகை ரூ.42,500–ஐ ஏற்பதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். அ1/136/2022)**

## 5. அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**2.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட வணிக வளாக குத்தகையினங்களுக்கு ஒப்படைக்கும் காலம் முதல் ஒன்பதாண்டு காலத்திற்கு குத்தகை உரிமம் வழங்க 16.03.2022 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. மேற்படி ஏலத்தில் கலந்து கொண்டு கீழ்க்கண்டுள்ளவாறு ஏலக் கேள்வித் தொகை கோரியுள்ளார்கள்:

| வ. எண். | குத்தகையினம் | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை விவரம் | | |
|---|---|---|---|---|
| | | பெயர் திரு./திருமதி. | ஏலக் கேள்வித் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை ரூ. |
| 1. | ஆர்.கே.வி. சாலையில் தினசரி அங்காடியின் பழைய மார்க்கட் வணிக வளாக தரைதளக் கடை எண். 89 (தற்போது வ.உ.சி. பூங்கா மைதானத்தில் அமைந்துள்ளது) | எஸ். பாரூக் அலி | 6,200– | |
| | | எஸ். குணசீலன் | 7,100– | |
| | | வி.எஸ். ஈஸ்வரமூர்த்தி | 7,000– | |
| | | எஸ். சித்ரா | | 5,000– |
| | | ஆர். ராஜேந்திரன் | | 4,800– |
| 2. | நேதாஜி வணிக வளாக கடை எண். 33, 34, 35, 48 மற்றும் 50 | ஒருவரும் வைப்புத் தொகை செலுத்த முன்வரவில்லை | | |
| 3. | காமராஜ் சாலை வணிக வளாக முதல் தளக் கடை எண்.7 | சுந்தர்ராஜ் | 4,550– | |
| | | சண்முகம் | 4,450– | |
| | | டி. மணிகண்டன் | 4,500– | |
| 4. | பேருந்து நிலைய வணிக வளாக மேற்கு புற முதல் தளக் கடை எண். 9 | சாந்தி & கோ | 10,500– | |
| | | ஆர். தீபன் | 10,000– | |
| 5. | வி.சி.டி.வி. ரோடு வணிக வளாக முதல் தளக் கடை எண். 9 | ஒருவரும் வைப்புத் தொகை செலுத்த முன்வரவில்லை | | |

வ.எண். 1-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆர்.கே.வி. சாலையில் தினசரி அங்காடியின் பழைய மார்க்கட் வணிக வளாக தரைதளக் கடை எண். 89 (தற்போது வ.உ.சி. பூங்கா மைதானத்தில் அமைந்துள்ளது) குத்தகையினத்திற்கு மூன்று நபர்கள் பொது ஏலத்திலும், இரண்டு நபர்கள் ஒப்பந்தப்புள்ளியிலும் கலந்து கொண்டு ஏலக் கேள்வி கோரியுள்ளார்கள். திரு. எஸ். குணசீலன் என்பவர் பிரதிமாத வாடகையாக ரூ.7100-க்கு உச்ச ஏலக் கேள்வி கோரியுள்ளார். மேற்படி உச்ச ஏலக் கேள்வியானது ஏற்கனவே செலுத்தி வந்த பிரதிமாத வாடகை ரூ.3300-ஐ விடவும், அருகிலுள்ள கடை எண்கள் 88 மற்றும் 90-ன் பிரதிமாத வாடகை முறையே ரூ.3508- மற்றும் ரூ.2875-ஐ விடவும் கூடுதலாக உள்ளது.

வ.எண். 2-ல் குறிப்பிடப்பட்டுள்ள நேதாஜி புதிய வணிக வளாக கடை எண்கள். 33, 34, 35, 48 மற்றும் 50 குத்தகையினங்களுக்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்வதற்கான வைப்புத் தொகை செலுத்துவதற்கு ஒருவரும் முன்வரவில்லை.

வ.எண். 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள காமராஜ் சாலை வணிக வளாக முதல் தளக் கடை எண். 7 குத்தகையினத்திற்கு மூன்று நபர்கள் பொது ஏலத்தில் கலந்து கொண்டனர். திரு. சுந்தர்ராஜ் என்பவர் பிரதிமாத வாடகையாக ரூ.4550-க்கு உச்ச ஏலக் கேள்வி கோரியுள்ளார். மேற்படி உச்ச ஏலக் கேள்வியானது ஏற்கனவே செலுத்தி வந்த பிரதிமாத வாடகை ரூ.3815-ஐ விடவும், அருகிலுள்ள கடை எண்கள் 6 மற்றும் 8-ன் பிரதிமாத வாடகையான ரூ.2815-ஐ விடவும் கூடுதலாக உள்ளது.

வ.எண். 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள பேருந்து நிலைய வணிக வளாக மேற்கு புற முதல் தளக் கடை எண். 9 குத்தகையினத்திற்கு 17 முறைகளாக நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகளில் வைப்புத் தொகை செலுத்தி கலந்து கொள்ள ஒருவரும் முன்வரவில்லை. தற்போது 18-வது முறையாக நடைபெற்ற பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு நபர்கள் வைப்புத் தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டனர். திருவாளர். சாந்தி & கோ என்பவர் பிரதிமாத வாடகையாக ரூ.10500-க்கு உச்ச ஏலக் கேள்வி கோரியுள்ளார். மேற்படி உச்ச ஏலக் கேள்வியானது ஏற்கனவே செலுத்தி வந்த பிரதிமாத வாடகை ரூ.16353-ஐ விட குறைவாகவும், அருகிலுள்ள கடை எண்கள் 8 மற்றும் 10-ன் பிரதிமாத வாடகை முறையே ரூ.7600- மற்றும் ரூ.6383-ஐ விடவும் கூடுதலாக உள்ளது.

வ.எண். 5-ல் குறிப்பிடப்பட்டுள்ள வி.சி.டி.வி. ரோடு வணிக வளாக முதல் தளக் கடை எண். 9 குத்தகையினத்திற்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்வதற்கான வைப்புத் தொகை செலுத்துவதற்கு ஒருவரும் முன்வரவில்லை
.

வ.எண். 1 மற்றும் 2-ல் உள்ள குத்தகையினங்களுக்கு வரப்பெற்ற உச்ச ஏலக் கேள்வித் தொகையானது மேற்படி குத்தகையினங்களுக்கு ஏற்கனவே செலுத்தி வந்த வாடகை மற்றும் அருகிலுள்ள கடைகளின் பிரதிமாத வாடகையை விட அதிகமாக உள்ளதால் மேற்படியார்களின் உச்ச ஏலக் கேள்வித் தொகைகளை ஏற்பதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

வ.எண். 2 மற்றும் 5-ல் குறிப்பிடப்பட்டுள்ள குத்தகையினங்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் வைப்புத் தொகை செலுத்தி கலந்து கொள்ள ஒருவரும் முன்வராததாலும், வ.எண். 4 குத்தகையினத்திற்கு 18-வது முறையாக நடைபெற்ற ஏலத்தில் முதல் தடவையாக கோரப்பட்டுள்ள உச்ச ஏலக் கேள்வித் தொகையானது ஏற்கனவே செலுத்தி வந்த வாடகையை விட குறைவாக உள்ளதாலும் மறு ஏலம் கோருவதற்கான நடவடிக்கையில் உள்ளது என்ற விவரம் மாமன்றத்திற்கு தெரிவிக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :-</u>

வ.எண். 1 மற்றும் 3-ல் உள்ள குத்தகையினங்களுக்கு வரப்பெற்ற உச்ச ஏலக் கேள்வித் தொகையானது மேற்படி குத்தகையினங்களுக்கு ஏற்கனவே செலுத்தி வந்த வாடகை மற்றும் அருகிலுள்ள கடைகளின் பிரதிமாத வாடகையை விட அதிகமாக உள்ளதால் மேற்படியார்களின் உச்ச ஏலக் கேள்வித் தொகைகளை ஏற்பதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். அ1/136/2022)**

## 6. அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**இடம்– ஈரோடு**
**நாள். 30.03.2022**

**மேயர்,**
**ஈரோடு மாநகராட்சி,**
**ஈரோடு.**